செ.வெ.எண்: 634/2016 நாள்: 13.09.2016

## <u>கால்நடை பராமரிப்புத்துறை</u>

## <u>பத்திரிக்கைச் செய்தி</u>

### <u>கோழி அபிவிருத்தி திட்டம் - நாட்டுக்கோழிப்பண்ணை அமைத்தல்</u>

தமிழ்நாடு அரசு கோழிப்பண்ணைத் தொழிலை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் "கோழி அபிவிருத்தித் திட்டத்தினை" ரூ.25.00 கோடி செலவில் 2016 —— 2017ம் ஆண்டிற்கு செயல்படுத்த ஆணை வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு 100 அலகுகள் நாட்டுக்கோழிப்பண்ணைகள் அமைக்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் விவசாயிகள்/ தனிநபர் தொழில் முனைவோர்/ சுய உதவிக்குழுக்கள் ஆகியோர் தேர்வு செய்யப்பட தகுதியானவர்கள். கோழிப்பண்ணை அமைக்க போதிய நிலம் விண்ணப்பதாரர் பெயரிலோ அல்லது அவரது குடும்ப உறுப்பினர் பெயரிலோ இருத்தல் வேண்டும். கோழி வளர்ப்பில் முன் அனுபவம் உள்ளவர்களுக்கு, கோழி வளர்ப்பில் ஆர்வம் உள்ள விவசாயிகளும் இத்திட்டத்தின் கீழ் பயன் பெறலாம்.

பயனாளிகள் தங்கள் சொந்த முதலீட்டில் அல்லது வங்கி மூலம் கடன் பெற்று இத்திட்டத்தின் மூலம் கோழிப்பண்ணை அமைக்கலாம்.

நாட்டுக்கோழிப்பண்ணை 250/ 500 வரை அமைப்பதற்கான கோழிக்கொட்டகை கட்டும் பணி, உபகரணங்கள், கோழித்தீவனம், கோழிக்குஞ்சுகள் வாங்குதல், அசோலா உற்பத்தி போன்றவை அமைக்க ஆகும் மொத்த செலவில், 25 சதவீதம் முன் மானியம் தமிழக அரசு வழங்குகின்றது. இதைத்தவிர, கோழி வளர்பதற்கான தீவனச்செலவினை குறைப்பதற்கு 10 பயனாளிகள் கொண்ட சுய உதவிக்குழு ஒன்றுக்கு தலா ஒரு "தீவன அரவை இயந்திரம்" தமிழக அரசு வழங்க உள்ளது.

தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு தமிழ்நாடு கால்நடை மருத்துவர் மற்றும் அறிவியல் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் பயிற்சி மையங்களில் 3 நாட்களுக்கு முறையான பயிற்சி அளிக்கப்படும்.

மேற்கூறிய தகுதியும் ஆர்வமும் உள்ளவர்கள் வங்கியிலிருந்து ஒப்புதல் கடிதம் அல்லது சொந்த நிதிக்கானச் சான்றுடன் விண்ணப்பங்களை அருகிலுள்ள கால்நடை உதவி மருத்துவரிடம் சமர்ப்பிக்க கோரப்படுகிறார்கள்.

மண்டல இணை இயக்குநர் (கூ.பொ)
கால்நடை பராமரிப்புத்துறை
கன்னியாகுமரி(இ)நாகர்கோவில்

**மாவட்ட ஆட்சித் தலைவர்**
கன்னியாகுமரி மாவட்டம்
நாகர்கோவில்

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.